# ரமல்லாவில் பாலஸ்தீன-இந்தியா தொழிற் பூங்கா (டெக்னோ பார்க்) அமைப்பதற்கு இந்தியா மற்றும் பாலஸ்தீனம் இடையே கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை

## அக்டோபர் 31, 2016

இந்தியா மற்றும் பாலஸ்தீனம் 31 அக்டோபர், 2016 அன்று ரமல்லாவில் பாலஸ்தீன-இந்தியா தொழிற் பூங்கா (டெக்னோ பார்க்) அமைக்க புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட்டனர். அக்டோபர், 2015இல் பாலஸ்தீனத்திற்கு மாண்புமிகு இந்திய ஜனாதிபதி அவர்களின் விஜயத்தின் போது,இந்த பூங்கா அமைக்க இருப்பதற்கான அறிவிப்பு செய்யப்பட்டது. இந்திய அரசு இந்த பூங்கா அமைக்க, 2 ஆண்டுகளுக்கு அரையாண்டு அடிப்படையில் ஒவ்வொன்றிலும் 3 மில்லியன் அமெரிக்க டாலர் தொகை என 12 மில்லியன் அமெரிக்க டாலர் வழங்கலும் அறிவித்துள்ளது. பாலஸ்தீன பக்கம் இந்த திட்டத்திற்காக நிலம் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது.நிறைவு பெற்ற பின், இந்த தொழிற்பூங்காவானது தொழிற்நுட்பம் தொடர்பான சேவையின் அனைத்து தேவைகளுக்கும் ஒரு நிறுத்தத்தில் தீர்வு வழங்கவும், நவீன தொழிற்நுட்பம் வழங்கவும், உள்ளூர் வணிகம், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு பயனளிக்கும் மற்ற தொழிற்நுட்ப நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை வழங்குதலுக்கும் முழுமையான தகவல் தொழில்நுட்ப வசதிகள் யாவும் கொண்ட பாலஸ்தீனத்தில் ஒரு தகவல் தொடர்பு மையமாக சேவை செய்யும்.

பாலஸ்தீனத்திற்கு உதவி செய்வதற்காக இந்திய அரசின் வலுவான அர்ப்பணிப்பின் பகுதியாக இந்த உதவி உள்ளது. இந்த திட்டம், இளம் பாலஸ்தீனியர்களுக்கு வேலை உருவாக்கம், வணிக மற்றும் பிற வாய்ப்புகளை பெற்றுத்தரவும் பெரிதும் உதவும்.

புது தில்லி

**அக்டோபர் 31, 2016**